00003

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்வி, உயர்கல்விச்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை

**EPE2815 / ESC2315 –** முன்பிள்ளைப் பருவ விருத்தி

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 24.06.2023 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

- பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக

## பகுதி - I

1. உடல் விருத்திக் கொள்கைகள் **மூன்றினைப்** (03) பெயரிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக.
2. "முதிர்ச்சி" என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.
3. பிறப்பிற்கு முன்னரான விருத்தி என்றால் என்ன? பிறப்பிற்கு முன்னரான விருத்தியை பாதிக்கும் காரணிகள் **ஐந்தினைப்** (05) பெயரிடுக.
4. "முயன்று தகவல் முறை" எனும் எண்ணக்கருவினை உதாரணங்கள் மூலம் விளக்குக.
5. முன்பள்ளி பிள்ளைகளால் வெளிப்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க மனவெழுச்சிகள் (Specific Emotion) **நான்கினைப்** (04) பெயரிடுக.
6. முன்பள்ளி பிள்ளைகளிடத்தே இனம் காணக் கூடிய "சமூக விரோத நடத்தைகள்" (Unsocial Behavior Patterns) **நான்கினைப்** (04) பெயரிட்டு நடத்தையொன்றினை விளக்குக.
7. இளம்பிள்ளைகளின் **மூன்று** (03) கற்றல் உத்திகளை உதாரணங்கள் மூலம் சுருக்கமாக விளக்குக.
8. முன்பள்ளி பிள்ளைகளின் "மொழிவிருத்தியில்" தாக்கம் செலுத்தும் காரணிகள் **ஐந்தினைப்** (05) பெயரிடுக.

**(5 X 8= 40** புள்ளிகள்)

## பகுதி - II

9.

**i.** பிள்ளைவிருத்தியுடன் தொடர்புடைய "முழுவிருத்தி" எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** முன்பள்ளி ஆசிரியர் ஒருவர், முன்பள்ளி பிள்ளைகளில் நல்ல மனவெழுச்சி விருத்தியை ஏற்படுத்த எவ்வாறு தலையிடமுடியும் என்பதனை உதாரணங்கள் மூலம் சுருக்கமாக விபரிக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. "பிள்ளை நடத்தைகள் " பற்றி கற்கும் உத்திகள் **மூன்றினை** (03) விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்டவற்றுள் ஏதேனும் ஒரு உத்தியை தெரிவு செய்து பிள்ளைகளை பற்றி கற்பதற்கு அவற்றை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. பியாஜேயினால் முன்வைக்கப்பட்ட அறிவுசார் விருத்திக் கொள்கையின் அடிப்படையில் காணப்படும் அறிவுசார் விருத்திப் படிநிலைகள் **நான்கினை** (04) சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பியாஜேயின் அறிவுசார் கோட்பாட்டினடிப்படையில் முன்பள்ளி பிள்ளைகளிடத்தே ஆசிரியர் எவ்வாறு அறிவுசார் கோட்பாட்டினை எளிதுபடுத்த முடியும் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

12.

i. மாணவர்களின் உடல் அளவு வேறுபாட்டில் தாக்கம் செலுத்தும் **ஐந்து** (05) காரணிகளை விமர்சனரீதியான பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

ii. பிள்ளைகளில் உள இயக்கத்திறன்களை விருத்தி செய்வதற்காக முன்பள்ளி ஆசிரியர் **நான்கினைப்** (04) படிப்படியாக விளக்குக.

(10 ள்ளிகள்)

13.

i. "சிறந்த சமூக நடத்தை முறைகள்" (Sound Social Behavior Patterns) கொண்ட பிள்ளைகளிடத்து முன்பள்ளி வகுப்பறையில் நல்ல பண்புகளை இனங்காண முடியும். உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி பிள்ளைகளிடத்து சமூக நடத்தை முறைகளை விருத்தி செய்ய முன்பள்ளி ஆசிரியர் என்ற வகையில் எவ்வாறு பங்களிப்பு செய்யமுடியும் என்பதை விமர்சனரீதியாக விளக்குக.

(10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -